# மருந்து தகவல் கையேடு

## [EMPAGLIFLOZIN]

### இந்த மருந்து எதற்கானது?

Empagliflozin என்பது சோடியம்-குளுக்கோஸ் இணைக்கடத்தி 2 (SGLT2) தடுப்பியாகும். சிறுநீரகங்கள் சர்க்கரையை (குளுக்கோஸ்) மீண்டும் உறிஞ்சி இரத்தத்தில் சேர்ப்பதை SGLT2 தடுப்பிகள் தடுக்கின்றன. இதன்வழி, சிறுநீரில் வெளியேற்றப்படும் சர்க்கரையின் அளவு அதிகரிக்கும். நீரிழிவு நோய் சிகிச்சைக்கு இது பயன்படுத்தப்படுகிறது. ஆரோக்கியமான உணவு, வழக்கமான உடற்பயிற்சி போன்ற வாழ்க்கைமுறை மாற்றங்களுடன் சேர்ந்து, இரத்தச் சர்க்கரை அளவைக் குறைப்பதற்கு இது துணை புரிகிறது. உங்களுக்கு இதயச் செயலிழப்பு இருந்தால், நீரிழிவு நோய் இல்லாவிட்டாலும், இதயப் பிரச்சினைக்கு உதவ இந்த மருந்து உங்களுக்குத் தரப்படலாம்.

### இந்த மருந்தை நான் எப்படி உட்கொள்ளவேண்டும் / பயன்படுத்தவேண்டும்?

உங்கள் மருந்தின் ஒட்டுவில்லையில் உள்ள வழிகாட்டியைப் பின்பற்றி, மருத்துவர் சொன்னதுபோல் மருந்தை உட்கொள்ளுங்கள். வழக்கமாக, இந்த மருந்து தினமும் ஒருமுறை உட்கொள்ளப்படும். நீங்கள் சாப்பாட்டுக்குமுன் அல்லது சாப்பிட்ட பிறகு மருந்தை உட்கொள்ளலாம்.

### இந்த மருந்தை நான் உட்கொள்ள / பயன்படுத்த மறந்துவிட்டால் என்ன செய்வது?

நீங்கள் ஒரு வேளைக்கான மருந்தை உட்கொள்ள மறந்துவிட்டால், நினைவுக்கு வந்தவுடன் தவறவிட்ட மருந்தை உட்கொள்ளுங்கள். பிறகு, அடுத்த வேளைக்கான மருந்தை வழக்கமான நேரத்தில் உட்கொள்ளுங்கள்.

அடுத்த வேளைக்கான மருந்துக்கு 12 மணி நேரத்துக்கும் குறைவாக இருந்தால், தவறவிட்ட மருந்தை உட்கொள்ளாமல், அடுத்த வேளைக்கான மருந்தை வழக்கமான நேரத்தில் உட்கொள்ளுங்கள்.

தவறவிட்ட மருந்துக்காக இருமடங்கு அல்லது கூடுதல் மருந்து உட்கொள்ளவேண்டாம்.

### நான் என்னென்ன முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்?

பின்வருவன உங்களுக்குப் பொருந்தினால், உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரிடம் தெரியப்படுத்துங்கள்:

- இந்த மருந்துக்கு அல்லது இந்த மருந்திலுள்ள மற்ற உட்பொருட்களுக்கு ஒவ்வாமை இருக்கிறது
- வகை 1 நீரிழிவு நோய் இருக்கிறது (இந்த மருந்து வகை 1 நோய்க்குப் பரிந்துரைக்கப்படவில்லை)
- நீங்கள் கர்ப்பமாக இருக்கிறீர்கள், கருவுறத் திட்டமிடுகிறீர்கள், அல்லது தாய்ப்பால் ஊட்டுகிறீர்கள்
- இதய அல்லது சிறுநீரகப் பிரச்சினைகள் உள்ளன
- பாதத்தில் சீழ்ப்புண் / கிருமித்தொற்று ஏதாவது இருக்கிறது

- நீங்கள் அடிக்கடி மதுபானம் குடிக்கிறீர்கள்
- இதற்குமுன் நீரிழிவு கீட்டோஅசிடோசிஸ் பாதித்திருக்கிறது. உங்கள் இரத்தத்தில் அல்லது சிறுநீரில் கீட்டோன்களின் அளவு அதிகரித்ததால், இரத்தத்தில் அமிலத்தன்மை கூடும் நீரிழிவுப் பிரச்சினை இது.
- இதற்குமுன் சிறுநீர்த்தடத்தில் கிருமித்தொற்று அல்லது சிறுநீர்ப்பை புற்றுநோய் இருந்தது
- ஏதாவது அறுவை சிகிச்சைக்கு அல்லது பரிசோதனைக்குச் செல்லத் திட்டமிடுகிறீர்கள் (நீங்கள் குறைந்தது 72 மணி நேரத்திற்குமுன் மருந்து உட்கொள்வதைத் தற்காலிகமாக நிறுத்த வேண்டியிருக்கலாம்)

நீங்கள் சாப்பிடாமல் இருந்து இரத்தப் பரிசோதனை செய்ய வேண்டுமானால், இரத்தம் எடுக்கப்பட்டு, நீங்கள் சாப்பிட்டு முடிக்கும்வரை மருந்தை உட்கொள்ளவேண்டாம்.

## இந்த மருந்தின் பொதுவான பக்கவிளைவுகள் என்ன?

எல்லா மருந்துகளையும் போலவே, இந்த மருந்தும் சில உத்தேசப் பக்கவிளைவுகளை ஏற்படுத்தலாம். ஆனால், எல்லோருக்கும் பக்கவிளைவுகள் ஏற்படுவதில்லை. பக்கவிளைவுகளில் ஏதாவது கடுமையாகி தொல்லை கொடுத்தால், உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரிடம் ஆலோசனை நாடுங்கள்.

Empagliflozin மருந்தின் பொதுவான பக்கவிளைவுகளில் உள்ளடங்குவன:

- பிறப்புறுப்பில் கிருமித்தொற்று
  ஆணுறுப்பில் அல்லது பெண்ணுறுப்பில் கிருமித்தொற்று ஏற்படக்கூடிய வாய்ப்பை இந்த மருந்து அதிகரிக்கக்கூடும். பிறப்புறுப்பில் அரிப்பு அல்லது வழக்கத்திற்கு மாறான வடியல் போன்றவை அறிகுறிகளில் உள்ளடங்கும்.
  - இவ்வாறு ஏற்படக்கூடிய வாய்ப்பைக் குறைக்க, எப்போதும் பிறப்புறுப்புகளை சுத்தமாக வைத்திருங்கள்

- சிறுநீர்த்தடத் தொற்று
  சிறுநீர்த்தடத் தொற்று ஏற்படக்கூடிய வாய்ப்பை இந்த மருந்து அதிகரிக்கக்கூடும். சிறுநீர் கழிக்கும்போது எரியும் உணர்வு, அடிக்கடி சிறுநீர் கழிக்கவேண்டும் போன்ற உணர்வு, அடிக்கடி சிறுநீர் கழித்தல், அல்லது சிறுநீரில் இரத்தம் தெரிதல் போன்றவை அறிகுறிகளில் உள்ளடங்கும்.
  - இவ்வாறு ஏற்படக்கூடிய வாய்ப்பைக் குறைக்க, எப்போதும் பிறப்புறுப்புகளை சுத்தமாக வைத்திருங்கள்

- இரத்த அழுத்தக் குறைவு
  உங்களுக்குத் தலைசுற்றலாக அல்லது தலை கிறுகிறுப்பாக இருக்கலாம், குறிப்பாக படுத்திருந்த அல்லது உட்கார்ந்திருந்த நிலையிலிருந்து எழும்போது. இது பெரும்பாலும் காலையில் அல்லது படுக்கையிலிருந்து முதன்முதலில் எழும்போது நேர அதிக சாத்தியமுண்டு.
  - மெல்ல எழுவது உதவக்கூடும். ஆனால், பிரச்சினை நீடித்தால் உங்கள் மருத்துவரிடம் ஆலோசனை நாடுங்கள்.

- நீரிழப்பு (உடலில் போதிய நீர் இல்லாத நிலை)
  உங்கள் சிறுநீரின்மூலம் உடலில் உள்ள மிகையான சர்க்கரை வெளியேற்றப்படுவதால், நீரிழப்பு நிலை ஏற்படலாம்.

- நீங்கள் உட்கொள்ளும் நீரைக் கட்டுப்படுத்துமாறு மருத்துவர் உங்களிடம் சொன்னாலொழிய, ஒவ்வொரு நாளும் கூடுதலாக 1 முதல் 2 குவளை தண்ணீர் குடிக்கவேண்டும்

- இரத்தச் சர்க்கரை குறைவு

  இரத்தச் சர்க்கரை குறைவு ஏற்படலாம். நீரிழிவு நோய்க்கான மற்ற மருந்துகளுடன் இந்த மருந்தை உட்கொள்ளும்போது, இதற்கான சாத்தியம் அதிகரிக்கும். இரத்தச் சர்க்கரை குறைவு ஏற்பட்டால், தயவுசெய்து உங்கள் மருத்துவரிடம் தெரியப்படுத்துங்கள். ஏனென்றால், உங்களது நீரிழிவு நோய் மருந்துகளில் மருத்துவர் மாற்றம் செய்ய வேண்டியிருக்கலாம்.

  இரத்தச் சர்க்கரை குறைவின் அறிகுறிகளில் உள்ளடங்குவன
  - பலவீனம்
  - தலைசுற்றல்
  - பசி
  - வியர்த்தல்
  - நடுநடுங்குதல்
  - மங்கலான பார்வை
  - நடையில் தடுமாற்றம்
  - வேகமான இதயத்துடிப்பு

  இரத்தச் சர்க்கரை குறைவின் அறிகுறிகளில் ஏதேனும் ஏற்பட்டால், உடனடியாகப் பின்வருமாறு செய்யுங்கள்:

  செயல் 1: வீட்டில் இரத்தச் சர்க்கரை மீட்டர் (குளுக்கோமீட்டர்) இருந்தால், உங்கள் இரத்தச் சர்க்கரை அளவைப் பரிசோதித்துப் பாருங்கள். இரத்தச் சர்க்கரை 4 mmol/L அளவுக்கும் குறைவாக இருந்தால், வேகமாகச் செயல்படும் சர்க்கரை 15 கிராம் உட்கொள்ளுங்கள். எடுத்துக்காட்டாக:
  - 3 குளுக்கோஸ் மாத்திரைகள் அல்லது
  - பாதி குவளை பழச்சாறு (200 மில்லிலீட்டர்) அல்லது
  - பாதி டின் மென்பானம் அல்லது இனிப்பான பானம் (175 மில்லிலீட்டர்) அல்லது
  - 1 கேன் குறைவான சர்க்கரை குளிர்பானம் (330 மில்லிலிட்டர்கள்) அல்லது
  - 3 தேக்கரண்டி சர்க்கரை, தேன் அல்லது சீனிப்பாகு

  செயல் 2: உங்களை 15 நிமிடம் கண்காணித்திடுங்கள். உங்களிடம் குளுக்கோமீட்டர் (இரத்தச் சர்க்கரை மீட்டர்) இருந்தால், 15 நிமிடத்திற்குப் பிறகு இரத்தச் சர்க்கரை அளவை மறுபடியும் பரிசோதித்துப் பாருங்கள்.

  செயல் 3: உங்கள் இரத்தச் சர்க்கரை 4 mmol/L அளவுக்கும் குறைவாகவே இருந்தால், அல்லது இரத்தச் சர்க்கரை குறைவின் அறிகுறிகள் நீடித்தால், நீங்கள் செயல் 1ல் உள்ளபடி மேலும் 15 கிராம் சர்க்கரை உட்கொள்ளவேண்டும்.

  இதற்குப் பிறகும் அறிகுறிகள் நீங்காவிட்டால், உடனடியாக மருத்துவரிடம் அல்லது மருத்துவமனைக்குச் செல்லுங்கள்.

செயல் 4: வேகமாகச் செயல்படும் சர்க்கரையை முன்னதாக உட்கொண்ட பிறகு, இரத்தச் சர்க்கரை 4 mmol/L அளவில் அல்லது அதற்குமேல் இருந்தால், சாப்பாட்டை அல்லது தின்பண்டத்தைச் சாப்பிடுங்கள்.

## நான் உடனடியாக மருத்துவக் கவனிப்பு நாடவேண்டிய அரிய, ஆனால் கடுமையான பக்கவிளைவுகள் என்ன?

மருந்து ஒவ்வாமையின் அறிகுறிகளில் பின்வருபவற்றுள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை உள்ளடங்கும்:

- முகத்தில் / கண்களில் / உதடுகளில் / நாக்கில் வீக்கம்
- மூச்சுத்திணறல்
- உடலெங்கும் தோல் அரிப்பு

இந்த அறிகுறிகள் ஏதேனும் உங்களுக்கு ஏற்பட்டால், நீங்கள் உடனடியாக மருந்தை நிறுத்திவிட்டு, உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரைப் பார்க்கச் செல்லவேண்டும்.

பின்வரும் கடுமையான பக்கவிளைவுகள் நேர்ந்தால், நீங்கள் உடனடியாக உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரைப் பார்க்கச் செல்லவேண்டும்:

- நீரிழிவு கீட்டோஅசிடோசிஸ் (DKA)
  - நீரிழிவு கீட்டோஅசிடோசிஸ் என்பது இந்த மருந்துடன் தொடர்புபடுத்தப்படும் அரிய, கடுமையான பக்கவிளைவாகும். வயிற்றில் அல்லது வயிற்றுப் பகுதியில் வலி, குமட்டல் அல்லது நீங்காத வாந்தி, குழப்பம், சோர்வு அல்லது வழக்கத்திற்கு மாறான அசதி, மூச்சு விடுவதில் சிரமம், அளவுக்கதிக தாகம், சுவாசத்தில் இனிப்பான பழ வாசம் போன்றவை அறிகுறிகளில் உள்ளடங்கும்
  - இது நேரக்கூடிய வாய்ப்பைக் குறைக்க, தினமும் போதிய அளவு தண்ணீர் குடிப்பது அவசியம். நீண்டநேரம் விரதம் இருப்பதால் அல்லது உணவை வெகுவாகக் குறைப்பதாலும் இது ஏற்படக்கூடிய வாய்ப்பு அதிகரிக்கலாம்.

- ஃபோர்னியரின் அழுகல்புண்
  - இந்த மருந்து மிகமிக அரிதாகப் பிறப்புறுப்பில் அல்லது மறைவிடப் பகுதியில் ஏற்படும் கடுமையான பாக்டீரியா கிருமித்தொற்றுடன் தொடர்படுத்தப்படுவதுண்டு. உங்களுக்கு 38 டிகிரி செல்சியஸுக்கு மேலான காய்ச்சல், வலி, பிறப்புறுப்பில் அல்லது பிறப்புறுப்புக்கும் மலவாய்க்கும் இடைப்பட்ட பகுதியில் சிவப்பாக்கம் அல்லது வீக்கம் ஏற்பட்டால், மருந்தை நிறுத்துவிட்டு, உடனடியாக மருத்துவக் கவனிப்பு நாடுங்கள்
  - இவ்வாறு ஏற்படக்கூடிய வாய்ப்பைக் குறைக்க, எப்போதும் பிறப்புறுப்புகளை சுத்தமாக வைத்திருங்கள்

- உங்கள் பாதங்களில் சீழ்ப்புண்கள் அல்லது கிருமித்தொற்றின் அறிகுறிகள் (எ.கா. வலி அல்லது வலியுணர்வு, சிவப்பாக்கம், வீங்கிய தோற்றம், வெதுவெதுப்பான உணர்வு)

## இந்த மருந்தை நான் உட்கொள்ளும்போது எந்தெந்த உணவை அல்லது மருந்தைத் தவிர்க்கவேண்டும்?

இந்த மருந்தை எடுத்துக்கொள்ளும் வேளையில் மது அருந்துவதைத் தவிர்த்திடுங்கள். ஏனென்றால், முகம் சிவத்தல், குமட்டல், வாந்தி, தலைவலி, வேகமான இதயத்துடிப்பு, வேகமான மூச்சு, தலைசுற்றல் போன்ற அறிகுறிகள் நேரலாம்.

## இந்த மருந்தை நான் எப்படி பத்திரப்படுத்தி வைக்கவேண்டும்?

சூரிய ஒளி நேரடியாகப் படாத, குளுமையான, ஈரமில்லாத இடத்தில் பத்திரப்படுத்தி வைக்கவேண்டும். இந்த மருந்து பிள்ளைகளின் கைக்கு எட்டாமல் இருக்கவேண்டும்.

## இந்த மருந்தைப் பாதுகாப்பான முறையில் வீசுவது எப்படி?

இந்த மருந்தை ஒரு கறுப்பு நிறக் குப்பைப் பையில் போட்டு, இறுக்கமாகக் கட்டிய பிறகு, குப்பைத்தொட்டியில் வீசவேண்டும்.

## கூடுதல் தகவல்

Empagliflozin மருந்தை எப்போது தற்காலிகமாக நிறுத்தவேண்டும்?

- உங்களுக்கு உடல்நலம் இல்லாதபோது. எடுத்துக்காட்டாக, அதிகக் காய்ச்சல், பசியின்மை, வயிற்றுப்போக்கு, வாந்தி அல்லது நீரிழப்பு நேரக்கூடிய அபாயம்
- நீங்கள் கர்ப்பமாக இருக்கும்போது

நீங்கள் பின்வருபவற்றுக்குத் திட்டமிட்டால், இந்த மருந்தை நிறுத்தவேண்டுமா அல்லது கூடுதல் முன்னெச்சரிக்கைகள் எடுக்கவேண்டுமா என்று உங்கள் மருத்துவரிடம் கேளுங்கள்:

- அறுவை சிகிச்சை அல்லது பல் சிகிச்சை
- மிகவும் குறைவான மாவுச்சத்து உட்கொள்ளும் எடை குறைப்புத் திட்டம். எடுத்துக்காட்டாக, கீட்டோஜீனிக் உணவுமுறை
- நெடுந்தொலைவு ஓட்டம் போன்ற கடுமையான உடற்பயிற்சி நடவடிக்கைகள்
- கர்ப்பம்
- ரமலான் மாத நோன்பு

உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணர் அறிவுறுத்தியதுபோல், குளுக்கோமீட்டருடன் (இரத்தச் சர்க்கரை மீட்டர்) உங்கள் இரத்தச் சர்க்கரை அளவைப் பரிசோதித்துப் பார்ப்பது நல்லது.

## பொறுப்புத்துறப்பு

*மேற்குறிப்பிடப்பட்ட பக்கவிளைவுகள் முழுமையாக ஏற்படக்கூடியவை அல்ல என்பதை கருத்தில் கொள்ளவும்.இம்மருந்தை எடுத்துக் கொள்வதால் தங்களுக்கு ஏதேனும் பக்க விளைவுகள் ஏற்பட்டது எனக் கருதினால் தங்களது மருத்துவர் அல்லது மருந்தகரிடம் கலந்து ஆலோசிக்கவும்.*

*பரிந்துரைக்கப்படும் அளவைவிட அதிக மருந்தை நீங்கள் உட்கொண்டால், உடனடியாக மருத்துவக் கவனிப்பு நாடுங்கள். இந்தப் பக்கத்தில் உள்ள தகவல்கள், உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரிடமிருந்து கிடைக்கும் தகவலுக்கு மாற்றாகாது. தயவுசெய்து, மேல்விவரம் அறிய உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரிடம் ஆலோசனை நாடுங்கள்.*

*இந்தக் கட்டுரை தேசிய மருந்து தகவல் பணிக்குழு உறுப்பினர்களால் சுகாதார அமைச்சின் ஆதரவோடு உருவாக்கப்பட்டது. இந்தப் பணிக்குழுவில் குழுமப் பங்காளிகள் (தேசிய சுகாதாரப் பராமரிப்புக் குழுமம், தேசியப் பல்கலைக்கழகச் சுகாதாரக் குழுமம், சிங்ஹெல்த்), சமூக மருந்துக்கடைகள் (கார்டியன், யூனிட்டி, வாட்சன்ஸ்), சிங்கப்பூர் மருந்தியல் சங்கம் ஆகியன உள்ளடங்குகின்றன. இந்த உள்ளடக்கம், மருந்துக்கடைகளிலும் சுகாதாரப் பராமரிப்பு நிலையங்களிலும் மருந்து கிடைக்குமா என்ற விநியோகத் தகவலைப் பிரதிபலிக்கவில்லை. இத்தகைய தகவலுக்கு, அந்தந்த நிலையங்களிடம் நீங்கள் கேட்டறியலாம்.*